**தலைப்பு 264 – யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 264 – யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குவதாகுகவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் காணப்பட்ட நிதி அல்லாச்சொத்துக்களின் மீதி ரூபா 429,965,870 ஆக காணப்பட்டபோதிலும் 2023 ஜனவரி 01 ஆந் திகதி திறைசேரியின் அச்சுப்பதிப்பின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 429,777,176 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 188,694 வேறுபாடு காணப்பட்டது. | தற்போது மாதந்தம் இணக்க கூற்று தாயரிக்கப்பட்டு குறித்த வேறுபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி உரிய கால நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு உரித்தான 50 எண்ணிக்கையான ரூபா 2,328,829 சொத்துக்கள் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்காமையால் சொத்தின் பெறுமதி அத்தொகையினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் உரிய காலப்பகுதியில் Cigas மென்பொதியில் பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 30 எண்ணிக்கையான நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 பிரதேச செயலகங்களில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினால் வழங்கப்பட்ட பல்வேறு வகையான கடன்களில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் 1413 பயனாளிகளிடமிருந்து 03 தொடக்கம் 09 இற்கும் மேலான தவணைக்கட்டணங்கள் அறவிடப்படாது ரூபா 62,424,236 நிலுவையாக காணப்பட்டிருந்தன. | ரூபா 62,424,236 நிலுவையாக உள்ள மீதியானது மொத்தமாகப் பெறவேண்டிய கடன் மீதியுடன் ஒப்பிடும் போது 1.87 சதவீதமாக காணப்படுகின்றது. திணைக்கள அறிவுறுத்தலின் பிரகாரம் இவ் வீதமானது 5 சதவீதத்தினை விட குறைவாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் குறித்த காலங்கடந்த மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைகள் உரிய காலப்பகுதியில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கு பணம் கிடைத்து 03 நாட்களுக்குள் விரைவாக சமுர்த்தி பயனாளிகளின் கணக்குகளில் வைப்பிலிடப்பட வேண்டும் என சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் 05 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியினால் கூட்டுமொத்தம் ரூபா 773,809,070 பணம் 01 நாள் தொடக்கம் 75 நாட்கள் வரை காலதாமதமாக பயனாளிகளின் கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது. | சமூக நலக் கொடுப்பனவுகளில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலில் மாற்றம் செய்யவேண்டியிருந்த காரணத்தினாலும் கிராம அலுவலர்களின் தரவுகளின் பிரகாரம் சமூகசேவை கிளையினால் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியல்கள் வழங்கப்பட்ட பின்னரே பயனாளிகளுக்குகொடுக்கப்பட்டு தற்பொழுது சீர்செய்யப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரிய காலத்தில் பயனாளிகளின் கணக்கில் பணம் வைப்பிலிடப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் HAF/1/1/Duty/Vol–II ஆம் இலக்க 2019.11.07 ஆந் திகதிய கடிதம் | 04 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 22 உத்தியோகத்தர்கள் மாதாந்த முன்நிகழ்ச்சித்திட்டம், விலகல் மற்றும் தினக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான தவறுகள் இனி வருங்காலங்களில் இடம் பெறாது தவிர்க்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் DRP/OP/01/DS/03(iv) ஆம் இலக்க 2023.04.11 ஆந் திகதிய கடிதம் | தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர்களால் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணங்கள் 11 நாட்கள் தொடக்கம் 365 நாட்கள் வரை பணத்தினை பிரதேச செயலகத்தில் கையளிக்காது கிராம அலுவலர்கள் தங்கள் வசம் வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான பிரச்சனைகள் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளன. | சேகரிக்கப்படும் பணங்கள் உரிய காலத்தில் வைப்பிலிடப்பட வேண்டும். |
| (இ) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் I ஆம் தொகுதியின் XV அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவு | நான்கு பிரதேச செயலகங்களினால் உரிய நேரத்தில் பதவி வெறிதாக்கல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது 08 அலுவலர்களின் பதவி வெறிதாக்கலானது பதவி வெறிதாகிய திகதியிலிருந்து 38 நாட்கள் தொடக்கம் 677 நாட்கள் வரை காலதாமதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் உரிய காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட நடவடிக்கையினை மேற்கொள்வதற்குரிய பொறிமுறைகள் உருவாக்கப் பட்டுள்ளது. | அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளின் பிரகாரம் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீள்குடியேற்ற மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சினால் 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகளில் 1,458 எண்ணிக்கையான ரூபா 1 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் மற்றும் 234 எண்ணிக்கையான ரூபா 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் ஆகியோர்களின் வீட்டுத்திட்ட வேலைகள் நாளதுவரை முழுமையாக நிறைவுசெய்யப்பட்டிருக்காதபோதிலும் கொடுப்பனவுகள் முழுமையாக அவர்களது சொந்த வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு பணம் மீளப்பெற முடியாதவாறு கூட்டுமொத்தம் ரூபா 65,958,938 நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டுமானப் பணிகளுக்கு பணம் செலுத்தும் போது நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 237ஆ(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன்படி செயல்படாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.4 வைப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தில் செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 20,996,124 உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது 06 வருடங்களாக வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன. | மலக்கழிவு மீள்சுழற்சி செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த கொடுப்பனவை தீர்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் இவை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்பு பணங்கள் உரிய காலத்தினுள் மீளளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 01 பிரதேச செயலகத்தில் பிடிபண வைப்புக்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஆகியவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 1,988,459 02 வருடங்களிற்கு மேலாக நிதிப்பிரமாணம் 571 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன. | குறித்த வேலைகள் நிறைவேற்றப்பட்டதும் பிடிபணம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 செலவின முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீண்டெழும் செலவினங்களின் 10 செலவு விடயங்களில் 3 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 32,654,000 மூல ஒதுக்கீட்டிலிருந்து வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், 08 செலவின விடயங்களுக்கு மூல ஒதுக்கீட்டின் 3 சதவீதம் தொடக்கம் 1700 சதவீதம் என்ற வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 32,104,000 வேறு செலவின விடயங்களிலிருந்து மூல ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மீண்டெழும் ஒதுக்கீடுகளை வினைத்திறனாக கையாண்டு விலகல்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலவினத்திற்கான மதிப்பீடு முறையான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.6 மிகை அறவீடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை VIII ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைதினக் கொடுப்பனவிற்கான மணித்தியாலங்கள் பொதுவாக பணியாற்றும் காலம் உள்ளடங்கலாக மாத்திரமே கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 73 உத்தியோகத்தர்கள் பொதுவான வேலை நேரத்திற்கு பின்னர் வேலைக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட விடுமுறை தினக் கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா 1,763,047 மேலதிக கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் அறிவுரைக்கமைய மேலதிக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது | மேலதிக கொடுப்பனவு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே இரு வேறுபட்ட அமைச்சுகளினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2021 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தம் ரூபா 196,039,247 கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்திட்டம் நாளதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருளாதாரமத்திய நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | குறித்த பொருளாதார மத்திய நிலைய கட்டடத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்வேறு செயற்திட்டங்களுக்காக நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் பெறப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 1,689,853 தொகை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாத நிலையில் பொது வைப்புக்கணக்கில் காணப்பட்டிருந்தன. | குறித்த வைப்பு தொகையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | வைப்பு தொகையை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் பிரதேச செயலகத்தில் ரூபா 41.6 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 08 கட்டடங்கள் கடந்த 17 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாததுடன் பராமரிப்புகள் அற்ற நிலையில் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அரிசி ஆலை வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை இயங்குகின்றன. | குறித்த கட்டடங்கள் கட்டப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 56,640,750 பால் பதனிடும் செயற்திட்டத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் கட்டட நிர்மாணம் ஆகிய இரண்டு வேலைத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் நாளதுவரை குறித்த வேலைத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கான செயல் திட்டம் 2024.07.02 அன்று விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

**3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்தபோதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 75,323,600 மலக்கழிவுகளை மீள்சுழற்சியிடல் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் குறித்த செயற்திட்டத்திற்காக ரூபா 65,955,381 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நாளதுவரை வேலைத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த கொடுப்பனவை இறுதி செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் இவை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் உதவியுடன் குறித்த வேலையை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தினை விரைவாக பூர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 பிரதேச செயலகங்களினால் ரூபா 199,424,247 பெறுமதியான 04 சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் குறித்த சொத்துக்களினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தென்மராட்சி காணி சுவீகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்டுகின்றதுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக காணி தொடர்பில் நில அளவைத் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | சொத்துக்களினை உரித்தாக்குவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 04 நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,085 ஆக காணப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 2,594 ஆக காணப்பட்டிருந்மையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 244 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மற்றும் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 771 மிகையாளணியினர் தொடர்பில் | பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கான கோரிக்கை விடுத்திருந்தும் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை. மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு தொடர்பான மிகை ஆளணிகள் மற்றும் இடமாற்றங்கள் குறித்த 2021ஆம் ஆண்டு இரு கடிதங்கள் வழியாக அறிவிக்கப்பட்டும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் 2020, 2021 இல் இடம்பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் | அனுமதிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய ஆட்சேர்ப்பு திட்டம் பின்பற்றப்பட வேண்டும். மிகை ஆளணியினரை பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நியமனத்திற்கும் ஆளணி இதுவரை உருவாக்கப்படவில்லை. பலநோக்கு அபிவிருத்தி செயலணி மூலம் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு நியமனக் கடிதம் இன்னும் வழங்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 18/2001 ஆம் இலக்க 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு சேவை நிலையத்திலும் சேவை புரியக்கூடிய ஆகக்கூடிய சேவைக்காலம் 05 ஆண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தெரிவுக்கணக்காய்வின் போது மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் கூட்டுமொத்தம் 99 அலுவலர்கள் 6 தொடக்கம் 23 வருடங்கள் வரை ஒரே சேவை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர். | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | அமைச்சுக்கள் மற்றும் மாவட்ட செயலகத்தினால் 07 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளைகள் 01 தொடக்கம் 13 மாதங்கள் கடந்தபோதிலும் 2024 ஜனவரி 31 ஆந் திகதி வரை நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | குறித்த உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் அந்தந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |